செ.வெ.எண்.03/2021 நாள்: 01.11.2021

**கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட ஆறு சட்டமன்ற தொகுதிகளுக்கு சிறப்பு சுருக்கத்திருத்தம் – 2022 –க்கான வரைவு வாக்காளர் பட்டியல் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.அரவிந்த், இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டார்கள்**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக சிறு கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.அரவிந்த், இ.ஆ.ப., அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட ஆறு சட்டமன்ற தொகுதிகளுக்கு சிறப்பு சுருக்கத்திருத்தம் – 2022–க்கான வரைவு வாக்காளர் பட்டியலினை, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் இன்று (01.11.2021) வெளியிட்டு, தெரிவித்ததாவது:–

தமிழ்நாடு முழுவதும் தொடர் திருத்தம் 2021 முடிவடைந்த நிலையில், இன்று (01.11.2021) வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படுகிறது. ஏற்கனவே இறுதி வாக்காளர் பட்டியல் 19.03.2021 அன்று வெளியிடப்பட்டது. அதன்படி வாக்காளர்களின் விபரம் கீழ்கண்டவாறு உள்ளது.

| தொகுதி எண் மற்றும் பெயர் | ஆண் வாக்காளர்கள் | பெண் வாக்காளர்கள் | இதர வாக்காளர்கள் | மொத்த வாக்காளர்கள் |
|---|---|---|---|---|
| 229, கன்னியாகுமரி | 145192 | 147639 | 112 | 292943 |
| 230, நாகர்கோவில் | 133485 | 136906 | 11 | 270402 |
| 231, குளச்சல் | 136272 | 131931 | 15 | 268218 |
| 232, பத்மனாபபுரம் | 120640 | 118368 | 28 | 239036 |
| 233, விளவங்கோடு | 121483 | 126343 | 27 | 247853 |
| 234, கிள்ளியூர் | 127586 | 125594 | 19 | 253199 |
| மொத்தம் | **784658** | **786781** | **212** | **1571651** |

சட்டமன்ற தேர்தல் மற்றும் பாராளுமன்ற இடைத்தேர்தல் முடிந்த பின்னர் நடைபெற்ற தொடர் திருத்தம் 2021–ன் படி கீழ்க்கண்டவாறு வாக்காளர் பட்டியலில் சேர்த்தல் மற்றும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் வீடு வீடாக சென்று ஆய்வு செய்யப்பட்டு இறந்த, இடம்பெயர்ந்த நபர்களை கண்டறிந்து நீக்கம் செய்யப்பட்டது.

| தொகுதி எண் மற்றும் பெயர் | சேர்த்தல் | | | | நீக்கல் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | இதரர் | மொத்தம் | ஆண் | பெண் | இதரர் | மொத்தம் |
| 229, கன்னியாகுமரி | 318 | 396 | 1 | 715 | 1434 | 1264 | 1 | 2699 |
| 230, நாகர்கோவில் | 491 | 568 | 0 | 1059 | 604 | 609 | 0 | 1213 |
| 231, குளச்சல் | 360 | 467 | 0 | 827 | 105 | 123 | 0 | 228 |
| 232, பத்மனாபபுரம் | 206 | 326 | 0 | 532 | 66 | 77 | 0 | 143 |
| 233, விளவங்கோடு | 234 | 314 | 0 | 548 | 283 | 231 | 17 | 531 |
| 234, கிள்ளியூர் | 232 | 321 | 0 | 553 | 84 | 130 | 0 | 214 |
| மொத்தம் | **1841** | **2392** | **1** | **4234** | **2576** | **2434** | **18** | **5028** |

இதனடிப்படையில் (01.11.2021) வரைவு வாக்காளர் பட்டியலில் வாக்காளர்களின் விபரம் கீழ்க்கண்டவாறு வெளியிடப்படுகிறது.

| தொகுதி எண் மற்றும் பெயர் | ஆண் வாக்காளர் கள் | பெண் வாக்காளர்கள் | இதர வாக்காளர்கள் | மொத்த வாக்காளர்கள் |
|---|---|---|---|---|
| 229, கன்னியாகுமரி | 144076 | 146771 | 112 | 290959 |
| 230, நாகர்கோவில் | 133372 | 136865 | 11 | 270248 |
| 231, குளச்சல் | 136527 | 132275 | 15 | 268817 |
| 232, பத்மனாபபுரம் | 120780 | 118617 | 28 | 239425 |
| 233, விளவங்கோடு | 121434 | 126426 | 10 | 247870 |
| 234, கிள்ளியூர் | 127734 | 125785 | 19 | 253538 |
| மொத்தம் | **783923** | **786739** | **195** | **1570857** |

01–11–2021 முதல் 30–11–2021 வரை அனைத்து வரையறுக்கப்பட்ட வாக்குசாவடி மையங்கள், அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் அனைத்து கோட்டாட்சியர் அலுவலகங்களிலும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல்,திருத்தம் மற்றும் முகவரி மாற்றம் தொடர்பான விண்ணபப்பங்கள் பெறப்படும். 01–01–2022 அன்று 18 வயது பூர்த்தி அடைந்தவர்கள் அனைவரும் தகுதியானவர்கள்.

எனவே, 13–11–2021 சனிக்கிழமை, 14–11–2021 ஞாயிற்றுக்கிழமை, 27–11–2021 சனிக்கிழமை, 28–11–2021 ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாட்களில் நடைபெறும் சிறப்பு முகாம்களில் படிவம் 6 – வாக்காளர் பட்டியலில் புதிதாக பெயர் சேர்த்தல், படிவம் 6 A – வாக்காளர் பட்டியலில் அயல்நாடுவாழ் வாக்காளர்கள் பெயர் சேர்த்தல், படிவம் 7 – வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கம், படிவம் 8 – வாக்காளர் பட்டியலில் திருத்தம், படிவம் 8A – வாக்காளர் பட்டியலில் முகவரிமாற்றம் (ஒரே சட்டமன்ற தொகுதிக்குள்) ஆகியவற்றிற்கு விண்ணப்பித்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.அரவிந்த், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.அ.சிவப்பிரியா, பத்மநாபபுரம் உதவி ஆட்சியர் மரு.பு.மலர்மேல்மங்கை, இ.ஆ.ப., நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் திரு.க.சேதுராமலிங்கம், தேர்தல் தனி வட்டாட்சியர் திரு.சேகர், வட்டாட்சியர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டார்கள்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.

செ.வெ.எண்.03/2021